**அனுப்புநர்**
தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை–600 006.

**பெறுநர்**
செய்தி ஆசிரியர்
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 060952/எப்.1/2019** **நாள் :09.05.2019**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – ஜுன் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வு – விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – சார்பு.

-----

நடைபெற்று முடிந்த மார்ச் 2019, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் வருகை புரியாதவர்கள், **14.06.2019** அன்று தொடங்கி **21.06.2019** வரை நடைபெறவிருக்கும் ஜுன் 2019, மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்கள் வாயிலாக ஆன்–லைனில் விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இணைப்பு:** செய்திக்குறிப்பு

**தங்கள் நம்பிக்கையுள்ள,**

**ஒம்/–**
**இயக்குநர்**

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

## மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வு ஜுன் 2019

## தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் தொடர்பான செய்திக் குறிப்பு

நடைபெற்ற மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் வருகை புரியாதவர்கள் 14.06.2019 அன்று தொடங்கி 21.06.2019 வரை நடைபெறவிருக்கும் ஜுன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் மட்டுமே ஆன்–லைனில் விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று **10.05.2019 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் முதல் 14.05.2019 (செவ்வாய் கிழமை) பிற்பகல் 5.45 மணி வரை** ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

- **தனியார் Browsing Centre-கள் மூலம் விண்ணப்பிக்க இயலாது.**

ஜுன் 2019 மேல்நிலை முதலாமாண்டு சிறப்பு துணைத்தேர்விற்கான கால அட்டவணையினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

**செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாதோருக்கான குறிப்பு :**

1. மார்ச் 2019, மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டில் மொத்தம் 35 மற்றும் அதற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின்போது **செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்றால் போதுமானது.** அத்தேர்வர்கள் எழுத்துத் தேர்வினை மீண்டும் எழுத இயலாது.

2. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அக மதிப்பீட்டில் மொத்தம் 35 மதிப்பெண்களுக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின் போது எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும்.

3. செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அத்தேர்வர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்ய வேண்டியதில்லை.

**தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை :**

தனித்தேர்வர்கள் ஒரு பாடத்திற்கு ரூ.50 + (இதர கட்டணம் ரூ.35/– ) மற்றும் ஆன்லைன் பதிவுக்கட்டணம் ரூ.50/- சேர்த்து பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்தல்</u>**

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாட்கள் குறித்தான விவரம் பின்னர் அறிவிக்கப்படும். தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

தேர்வர்களுக்குத் தேர்வெழுத தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**இடம் : சென்னை – 600 006**
**நாள் : 09 .05.2019**